116—

சென்னை கொளத்தூரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்.

*11771— திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு வீட்டுவசதிமற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கொளத்தூரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அடுக்குமாடி வீடுகள் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது கொளத்தூரில் வாரியத்த தால் அடுக்குமாடி வீடுகள் கட்ட திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

சிக்கன நடவடிக்கை எடுக்க நல்ல ஆலோசனை கூறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கல்.

வினா எண் 11563—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சிக்கன நடவடிக்கை எடுக்க நல்ல ஆலோசனை கூறுபவர்களுக்கு பரிசுகள் வழங்க அரசு முன்வருமா?